# செங்கம்

# நடுகற்கள்

பதிப்பாசிரியர்

டாக்டர். இரா. நாகசாமி
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை
1972

முதற் பதிப்பு 1972
தொ. பொ. ஆ. துறை எண் 21

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
Acc No 10255
Date
MADRAS

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

செங்கம் நடுகற்கள்

417.7095482
நாக

டாக்டர் இரா. நாகசாமி

விலை :

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

# முன்னுரை

சென்னை மாநகர்க் கல்வெட்டுக்களையும், கன்னியாகுமரிக் கல்வெட்டுக் களையும் ஆய்ந்தவுடன், 1971-ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டம் செங்கம் பகுதி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பகுதியில் கல்வெட்டு ஆய்வு இதுகாறும் சரிவரச் செய்யப்படவில்லை. இது காடுகளும் மலைகளும் நிறைந்த பகுதி. இடர்பாடுகள் பலவற்றை எதிர்த்துத்தான் கல்வெட்டுக்களைப் படி எடுக்கவேண்டும். இவ்வாறு இத்துறையால் எடுக் கப்பட்ட பல கல்வெட்டுக்கள் தமிழக வரலாற்றுக்குப் பல புதிய செய்தி களைத் தந்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இந்நடுகற்கள் வரலாற்றிற்கும், இலக்கியத்திற் கும் அளிக்கும் புதிய செய்திகளால் தமிழ் மக்களின் கவனத்தை ஈர்த் துள்ளன. ஆதலின் இவை மட்டும் இத்தொகுதியில் இடம் பெறுகின் றன. தொடர் எண் இத்துறையால் அவ்வாண்டு படி எடுக்கப்பட்ட அனைத்துக் கல்வெட்டுகளுக்கும் இடப்பட்டதாகும்.

இவற்றைப் போர் முனை வீரர்கள் போல் கல்லும், முள்ளும், காடும், மலையும் கருதாது, கால் நடையாகவே ஊர் ஊராகச் சென்று தேடிக் கண்டுபிடித்தும், படித்தும் அளித்த கல்வெட்டாய்வாளர்கள் திருவாளர்கள் நடன. காசிநாதன், கு. தாமோதரன், ச. ஹரிஹரன், மா. சந்திரமூர்த்தி முதலியோர்க்கும், அவர்களுடன் உழைத்த சிற்றெழுத் தர்களுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள் ளோம். திரு. நடன. காசிநாதன் இக்கல்வெட்டுகளைப் பிழையறப் படித்து வரலாற்றுக் குறிப்புரை எழுதி உதவியதோடின்றி, பிழை திருத்தி அச் சாக்கும் பொறுப்பையும் ஏற்று பணியாற்றியுள்ளார். அச்சுப் பிரிவினர் அயராது உழைத்து, இதை விரைவில் வெளிக் கொணரப் பணியாற்றி யுள்ளனர். நடுகற்கள் சில, செங்கம் வட்டம் தொரைப்பாடியில் இருப் பதைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை, ஆராய்ச்சி மாணவர் திரு. நாகலிங்கம் இத்துறையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். மேலும் இவ்வாய்வு தொடர்ந்து நடைபெறுகிறது. முழுமையும் படி எடுத்த பின்னர்தான் வரலாற்றில் மேலும் தெளிவு ஏற்படும்.

**இரா. நாகசாமி**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வடஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 2?-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 6-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தொரைப்பாடி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | மகேந்திரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : வேடியப்பன் கோயிலில் கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும், வலது காலின் பக்கத்தில் சிமிழும் உள்ளன. உருவத்தின் வலப்பக்கத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் இரண்டாவது ஆட்சி ஆண்டில் கங்கரசர் மக்கள் பொன்னந்தியார் பெருமுகை மீது போர் தொடுத்தபொழுது, கங்கரசரின் சேவகரும், ராற்றூரை ஆண்டவருமான குன்றக்கண்ணியார் என்பார் போரில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய மயேந்திர
2 பருமற்கு [றண்ணு] ஆவது க
3 ங்கரைசரோடு பவ்வது கங்
4 கரைசரு மக்கள் பொன்
5 னந்தியாரு பெருமுகை
6 எறிந்த ஞான்று கங்க
7 ரைசரு சேவகரு எறிந்து
8 பட்டாரு ராராற்றா ஆண்ட
9 குன்றக் கண்ணியார்
10 கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 12-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 8-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தொரைப்பாடி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | இரண்டாம் நரசிம்மன்? | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : வேடியப்பன் கோயில்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் சிமிழ் உள்ளது. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் நரசிம்மவர்மனின் பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டில் கொங்கணி அரசர் மகன் வா . ச்சனைச் சிரிகங்கரசர் தாக்கிய போது அப்போரில் சிரிகங்கரசர் சேவகர் கொற்றவிணற்ற குன்றனுர் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. எழுத்து வளர்ச்சியுற்ற நிலையில் உள்ளது.

கல்வெட்டு :

1 கோவியைஅ நரைசிங்க பருமற்கு யாண்டு [பன்]
2 னிரண்டாவது கொங்கணி அரைசர் மகன் வா .
3 ச்சன் மேற்சென்று சிரிகங்கரைசர் செ .
4 வோர் எறிந்த ஞான்று பட்டார் சிரிகங்கரைசர் சேவ
5 கர் கொற்றவிணற்ற குன்றனுர் கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 39-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | சாத்தனூர் (மல்லிகாபுரம்) | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | மகேந்திரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : வேடியப்பன் கோயில்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும், வலது கையில் வாளும் உள்ளன. உருவத்துக்கு மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் முப்பத்தொன்பதாம் ஆட்சி ஆண்டில் சக்கரவரு படை சருக்கிருந்த ஊர் போந்தையைத் தாக்கியபோது ஞக்கையாரின் பெயரனும் வத்தாவனின் மகனுமான நந்தி வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய மசீந்திரபரு
2 மற்கு முப்பத்தொன்பதாவது
3 வாணகோ அரைசரு மருமக்கள் பொ
4 ற்റெருக்கையார் சருக்கிருந்த ஊர் போ
5 ந்தை மேற் சக்கரவரு படை வந்த ஞா
6 ன்று ஞக்கையார் இளமகன் வத்தாவ
7 ன் மகன் னந்
8 [தி எறி]ந்து பட்டா
9 ன் கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 11-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சாத்தனூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் நரசிம்மவர்மர்? | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : வேடியப்பன் கோயில்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடக்கை நீட்டியும் வலக்கையில் குறுவாளும் இருக்கின்றன. உருவத்தின் மேற் பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் நரசிம்மவர்ம னின் பதினோராம் ஆட்சி ஆண்டில் மேற்கோவலூர் நாட்டைச் சேர்ந்த அளவிற் பாடி கடிபகையார் ஆநிரைகளைக் கவர்ந்தபோது அவற்றை மீட்ட உணங்க யாரின் மகனான கோத்தையார் என்பாரின் சேவகர் ஆராகவண்கரின் மக்கள் கணிமாதன் வீர மரணம் எய்தியதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய நரைசிங்
2 க பருமற்கு பதினொன்
3 றுவது மேற்கோவலூர் நாட்டு அள
4 இற்பாடி கடிபகையார் தொறு கொண்ட [ஞா]
5 ன்று சென்று தொறு இடுவித்து பட்டாரு உணங்க
6 யார் மகனர் கோத்தையார் சேவகன் ஆரோகவண்க
7 ர் மக்கள்
8 கணிமாத
9 ஞர் கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 4-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 911 |
| ஊர் : | அய்த்தாம்பாளையம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் கீழ்ப்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சோழ மன்னன் முதலாம் பராந்தகனின் நான்காம் ஆட்சி ஆண்டில் பாண அரசர் வேட்டுவதியரையரின் ஆளும் மேற்கோவலூர் நாட்டைச் சேர்ந்த அளவிப்பாடியில் வாழும் ஆந்தைபொன்னி என்பானின் மகனுமான மொடையன் ஆநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோப்பரகேசரி பன்மர்
2 கு யாண்டு நான்காவது வாண
3 கோவரையர் [வேட்]டுவதியரை
4 யராள் மேற்கோவலூர் நாட்டு
5 அளவிப்பாடி உடைய ஆந்தை பொ
6 ன்[னி] மகன் மொடையன் தொறு மீட்டு
7 ப் பட்டான் கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 14-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | வீரணம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | கம்பவர்மன் | | |

இடம் : அய்யனாரப்பன் கோயில், கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பக்கத்திலும், இடப்பக்கத்திலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் கம்பவர்மனது பதினான்காவது ஆட்சி ஆண்டில், பாண அரசன் வயிரமேகன் வாணகோப்பாடியையும், இலாடைப்பாடியையும், மிலாட்டையும், சோழநாட்டைச் சேர்ந்த காவிரியின் வடகரையிலுள்ள பகுதிகளையும் ஆள்கின்றபோது; வேணாடு முந்நூறையும், எயில்நாடு ஐந்நூறையும் ஆண்டு வந்த நந்திப்பெருமானார் மகன் அக்கழிமல்லன் என்பார் வெண்ணத்தையும், சாத்தனூரையும் ஆண்டு வந்தார். அச்சமயம், மங்களநாட்டைச் சேர்ந்த மாதேவரின் படை சாத்தனூரைத் தாக்கியது. அப்போது வெண்ணத்தைச் சேர்ந்த மழநாடர் மொடப்பன், பின்பு சென்று போரிட்டு வேணாட்டெல்லையில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. இக்கல்லுக்குப் பக்கத்திலுள்ள கல்லில் குறிக்கப்பட்டுள்ள காராச்செங்கன் வீர மரணம் அடைந்ததையும் தெரிவிக்கும் வகையில் அவனுடைய பெயரும் இக்கல்லில் குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசைய கம்பபோத்தரை

2 யர்க்கு யாண்டு பதினாலாவது வாண கோவரைய

3 ர் வஇரமேகனார் வாணகோப்பாடியும் இலாடைப் பா

4 டியும் மிலாடுஞ் சோழநாட்டுக் காவிரிஇன் வ

5 டகரை எல்லாமாளா நின்ற காலத்து வேணாடு முன்நூ

6 றும் மெஇனூடைந்நூறு ஆண்ட நந்தி பெ

7 ருமானார்

8 மகனார் அ

9 க்கழி மல்ல

10 ஞர் வெண்ண
11 மு மிசாத்தனூ
12 ரும் மாளா நிற்க
13 மங்க்ள நா
14 டுடைய மா
15 தேவ்ர் படை
16 சாத்தனூரை
17 எறிய
18 வெண்ண
19 முடைய
20 மழ நாட[ர்]
21 மொடப்ப
22 ன் பின்பு செ
23 ன்று பிண
24 ங்கி வேணு
25 ட்டெல்லை
26 யிற் காரா
27 ச்சங்கன்
28 ப்பட்டார்
29 மழநா
30 [டர்] கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | கண்ணக்கந்தல் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | பல்லவர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : தரடாப்பட்டிலிருந்து கண்ணக்கந்தலுக்குச் செல்லும் சாலே ஓரம் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்வெட்டு உடைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில் இருக்கிறது. வலது கையில் உறையிலிருந்து குறுவாளை உருவும் நிலே. உருவத்தின் மேற்பகுதியில் இரு தோரணங்களும், இடது காலுக்கு அருகில் கண்ணுடியும், சிமிழும், கெண்டியும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும், இடப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் ஆட்சியில் பொன்னரம்பனுரின் சேவகனும் வளியப்பூராரின் மகனுமான தாளச்சாமி வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . . . .
2 . . . மருமக்
3 . . . னரம்பனு
4 . . . ண கோ அரைசரு
5 . . . கள் கந்தவிண்ண
6 . . . [ற]லப் புஞ்சிச் சென்ற
7 [ஞா]ன்று பொன்னரம்பனுர் சே
8 வகன் வளியப்பூராார் மக
9 ன் தா
10 ளச்சா
11 மி கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 38-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சே. கூடலூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | | |

இடம் : சுடுகாட்டின் அருகில் ஏரிக்கரையில் நிறுத்தப் பட்டிருக்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும், சிமிழும், வில்லுக்கு மேற்பகுதியில் தோரணமும் உள்ளன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் முப்பத்தெட்டாவது ஆட்சி ஆண்டில் பாண அருசருடைய மருமக்களான கந்தவிண்ணனூர் கூடலில் ஆநிரை கவர்ந்தபோது பொன்னரம்பனூர் கொல்லகச் சேவகன் காகண்டி அண்ணவன் என்பான் அவ்வாநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. இக்கல்லை கூடலைச் சேர்ந்த இளமக்கள் நட்டுவித்தனர் என்பதையும் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசை
2 ய மஇந்திர பரு
3 மற்கு முப்பத்தெட்டா
4 வது வாணகோஅரைசரு மரு
5 மக்கள் கந்தவிண்ண
6 னூர் கூடல் தொறுக் கொண்ட
7 ஞான்று தொறு இடுவித்துப் பட்டா
8 ன் பொன்னரம்பனூர் கொல்லகச்
9 சேவகன் காகண்டி அண்ணவன் கல்
10 கூடல் இள
11 மக்கள் நடுவி
12 த்த கல்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 44-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 8-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கீழ்இராவந்தவாடி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | நந்தீச்சுவரவிக்கிரமபருமர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : ஊரின் மேற்கேயுள்ள வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் வலப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. வலது கையில் வில்லும், இடது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. வலது காலுக்குப் பக்கத்தில் சிமிழும், இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும் உள்ளன. வீரனின் வலது தோளில் அம்பு பாய்ந்துள்ளது. உருவத்தின் மேற்பகுதியிலும் இடப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் நந்திவர்மனின் நாற்பத்து நான்காம் ஆட்சி ஆண்டில் மலாட்டு மேற்கோவலூர் நாட்டு இராமந்தைவாடி மேல் மங்களப்பெருமனார் படை தாக்கிய பொழுது, வாணபெருமானாரின் சேவகன் வேணர்க்களியன் என்பான் போரில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய நந்தீச்சுவ
2 ர விர்கிரமபருமற்கு யாண்டு நாற்பத்
3 து நாற்[1]காவது மலாட்டு மேற்கோவலூர் நா
4 ட்டு இராமந்தைவாடி மேற் மங்கள பெரு
5 மனார் படை வந்த ஞான்று வாணபெருமானார்க் கா
6 ய்ப் பட்டான் வேணர்
7 க் களியன்

1. ன்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 2-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 8-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | தா. வேளூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 1933-34, எண். 69 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | எபிகிராபியா இந்திகா, தொகுதி 32, பக்கம் 110-111 |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | இரண்டாம் நரசிம்மவர்மன் | | |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறுவாளும் தாங்கிய நிலை. இடது காலின் பக்கத்தில் ஒரு சிமிழ் உள்ளது. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மனின் இரண்டாம் ஆட்சி ஆண்டில் பாண அரசரின் சேவகரும் மேல் கொன்றை நாட்டைச் சேர்ந்த மேல் வேளூரை ஆள்பவருமான பனையமாரியார் என்பார் ஆநிரைகளைக் கவர்ந்தபோது வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய நரசிங்கபருமற்கு இரண்டா
2 வது வாணகோஒ அதிரைசர்[1] சேவகர் மீ கொன்
3 றை நாட்டு மேல் வேளூர் ஆளும் பனையமா
4 ரியார்[2] இவ்வூர்த் தொறுக் கொண்ட ஞான்று பட்டா[ர்]

---

1. 'வாணகோன் அதிரைசர்' என்று எபிகிராபியா இந்திகா தொகுதி 32-இல் படிக்கப்பட்டுள்ளது.
2. 'பறையமாளியார்' என்று மேற்கூறிய நூலில் படிக்கப்பட்டுள்ளது

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 3-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சின்னய்யன்பேட்டை | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | கம்பவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : சாவுமேட்டு வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. இக்கல்வெட்டு மூன்று தனிக்கற்களில் எழுதப்பட்டுள்ளது. வீரனின் உருவம் ஒரு கல்லிலும், கல்வெட்டின் முதல் ஏழு வரிகள் மற்றொரு கல்லிலும், பிற ஆறு வரிகள் மற்றொன்றிலுமாகப் பொறிக்கப்பட்டுள்ளன பல்லவ மன்னன் கம்பவர்மனின் மூன்றாவது ஆட்சி ஆண்டில் வயிரமேகவாணகோவரையரின் சேவகனும் மேல் குன்றை நாட்டு மலையனூரில் வாழும் செம்பத்தொண்டன் மகனுமான காரிப்பெருமான், பாசாற்றூரைச் சேர்ந்த எருமை நிரைகளை எயில் நாட்டார் கவர முற்பட்ட போது அவர்களை எதிர்த்துப் போரிட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசைய கம்ப
2 பருமற்கு யாண்டு மூன்றாவது
3 வயிரமேகவாணகோவரையர் சேவகன்
4 மீகுன்றை ஞாட்டு மலையனூருடைய செம்பத்
5 தொண்டன் மகன் காரிப்பெருமான் பாசா
6 ற்றெருமைத் தொறு எயினாட்டார் கொள்ளப்
7 பாசாற்றூர் பூசலிடப் பூசல் சென்று கோலூ
8 ர் நாட்டுச் சிற்றிடையாற்று முதுகொன்றை
9 மூக்கின் மீமலை அயங்கயக்கரையிற் செ
10 ன்று முட்டி மலையனூருடைய செம்பர் ம
11 கன்னான காரிப்பெருமான்ணன் உ
12 ரையிலம்புமாள எவ்விப் பத்திர முரு
13 வி எதிரே சென்று பட்டான்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 6-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 9-ஆம் நூற்றூண்டு |
| ஊர் : | சின்னய்யன்பேட்டை | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | கம்பவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : சாவு மேட்டு வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : இக்கல்வெட்டு இரண்டு தனிக்கல்லிலும், வீரனது உருவத்துக்கு மேலும் பொறிக்கப் பெற்றுள்ளது. வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் தனிக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறு வாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டி உள்ளது. பல்லவ மன்னன் கம்பவர்மனின் ஆறும் ஆட்சி ஆண்டில் மேல்கொன்றை நாட்டிலுள்ள புளியூரைச் சார்ந்த எருமை நிரைகளைக் கவர்ந்து சென்றபோது, கொங்கு நாட்டைச் சேர்ந்த எழுமாத்தூர் என்னும் ஊரில் வாழும் சாகாடச் சிற்றன் என்பான் பின் தொடர்ந்து சென்று மேல்வேணாட்டைச் சேர்ந்த மணிக்கலவடவூரில் போரிட்டு அவ்வெருமை நிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. ஐந்தாம் வரிக்குக் கீழ் தலைகீழாகச் சில எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

1 கோவிசைய கம்பபர்மற்கு
2 யாண்டு ஆறுவது கொங்க
3 த் தெழுமாத்தூர் இருந்து
4 வாழுஞ் சாகாடச் சிற்றன்
5 ம்கொன்றை நாட்டு
6 ப் புளியூர் எரு
7 மை கொண்ர ஞா
8 ன்று பூசல்லோடி
9 மேல் வேணாட்டு மணி
10 க்கலவடவூரில் முட்டி எ
11 ருமைத் தொறு மீட்டு மட்டா
12 ன் சாகாடச் சிற்றன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 6-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சின்னய்யன்பேட்டை | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |
| மன்னன் : | கம்பவர்மன் | | |

இடம் : சாவுமேட்டு வேடியப்பன் கோயில்.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. கல் உடைந்து தனியாக வீழ்ந்து கிடந்தது. வீரனது உருவம் பொறித்த கல் காணப்படவில்லை. பல்லவ மன்னன் கம்பவர்மனது 6-ஆம் ஆட்சி ஆண்டில் மேல் கொன்றை நாட்டுப் புளியூரைச் சேர்ந்த சாகாடச்சிற்றன் என்பான் புளியூரில் எருமை கவர்ந்ததைக் குறிக்கிறது. அவ்வாறு கவர்ந்தபோது அப்போர் நிகழ்ந்து, போரில் வீர மரணம் அடைந்தவரைக் குறிப்பதாக இக்கல்வெட்டு அமையும்.

கல்வெட்டு :

1 கோவிசைய கம்போதஅர்கி ய[ா]
2 ண்டு ஆறுவது மீய்கொன்றை நாட்டுப்
3 புளியூரிருந்து வாழுஞ் சாகாட
4 ச்சிற்றன் புளியூ எருமை[1] கொண்ட
5 ஞான்[று] பூசல்லோடி மே
6 மணிக்கல . . . .
7 . . . . . . . . . . . . . . . . .

1. புளியூர் எருமை என்று படிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 34-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | எடுத்தனூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : ஊரின் மேற்கே உள்ள ஊமைவேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. இடது காலின் பக்கத்தில் சிமிழும் கெண்டியும், வலது காலின் பக்கத்தில் காத்திருக்கும் நிலையில் ஒரு நாயும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பக்கத்திலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. உருவத்தின் மேற்பகுதியில் இரு தோரணங்களும் உள்ளன. மேற்பகுதியில் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் முப்பத்து நான்காவது ஆட்சி ஆண்டில் பாண அரசருடைய மருமக்கள் பொற்றெருக்கையாரின் இளமகன் கருந்தேவக்கத்தி தன்னுடைய எருமைப் புறத்தே வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. வலப்பக்கத்தில் கோவிவன் என்னும் நாய் இரு கள்ளனைக் கடித்துக் காத்து நின்றதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

I

1 கோவிசைய
2 மயிந்திர பருமற்கு
3 முப்பத்து நான்காவது வாணகோ
4 அரைசரு மருமக்கள் பொற்றெருக்கை
5 ஆர் இளமகன் கருந்தேவக்கத்தி தன்
6 னெருமைப்
7 புறத்தே வா
8 டி பட்டா
9 ன் கல்

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, MADRAS-28. LIBRARY Acc No. 10255 Date

(திருப்பவும்)

# II

[கோவிவ]
ன்னென்னு
ந் நாய் இ
ரு கள்ள
னைக் கடித்
துக் காத்திரு
ந்தவாறு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 21-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி பி. 6-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | கொட்டையூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | சோமாசிகோதிருமான் | | |

இடம் : சிறைமீட்டான் கோயிலில் மேற்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன சோமாசிகோ திருமான் என்னும் மன்னனின் இருபத்தொன்றுவது ஆட்சி ஆண்டில் மேல் கொன்றை நாட்டுப் பெரும்புளியூர் அரசன் தொல்தேவர் படையெடுத்த பொழுது மறுஅதிரைசர் சேவகனை கதவசாத்தன் என்பான் போரில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. சின்னய்யன்பேட்டைக் (கம்பவர்மனின்) கல்வெட்டில் மீகொன்றை நாட்டுப் புளியூர் குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்லில் காணப்பெறும் உருவம் தர்மபுரி மாவட்டம், கோரையாற்று சிம்மவிஷ்ணு காலத்திய நடுகல்லில் [1971/86] காணப்படும் உருவத்தை ஒத்துள்ளது. எனவே இது கி. பி. ஆறும் நூற்றுண்டைச் சார்ந்ததாக இருக்கலாம்.

கல்வெட்டு :

1 சோமாசி கோ திருமானில்கு
2 இருபத்தொன்றுவது மீகொன்
3 றை நாட்டு பெருபுளிஊர் தொல்[தே]
4 வரு சுட்ட ஞான்று மறு அதிரைச
5 ரு சேவகன் கதவசாத்த பட்டான்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 33-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கொட்டையூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | | |

இடம் : ஏரியின் கிழக்குக் கரையில் கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடதுகை வில்லைத் தாங்கியும், வலதுகை உடைவாள் மீதும் உள்ள நிலை. வில்லின் எதிரில் அம்புகளும், தூணியும் உள்ளன. இடது காலுக்குப் பக்கத்தில் கண்ணாடி, சிமிழ், கெண்டி ஆகியவை உள்ளன. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் முப்பத்து மூன்றாவது ஆட்சி ஆண்டில் வாணகோஅரைசர் மருமக்கள் பொன்னரம்பனார் மேல் வாணகோஅரைசர் மருமக்கள் கந்தவிண்ணனார் படையெடுத்துச் சென்றபோது கந்தவிண்ணனாரின் சிற்றப்பனார் பொன்னிதனாரின் இளமகன் பொங்கியார் மகன் கத்தி எய்து வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய ம
2 சீந்திரபருமற்கு
3 முப்பத்து மூன்றாவது
4 வாணகோ அரைசரு மரும
5 க்கள் பொன்னரம்பனார்
6 மேல் வாணகோ அரைசரு மரு
7 மக்கள் கந்தவிண்ணனா
8 ர் வேல்மறுத்திச் சென்ற ஞா
9 ன்று கந்தவிண்ணனா
10 ர் தஞ்சிற்றப்பானார் பொ
11 ன்னி[தன்]னார் இளமகன்
12 பொங்கியார் மகன் கத்
13 தி எய்து பட்டான் கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 33-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கொட்டையூர் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : ஏரியின் கிழக்கே உள்ள வயலில் வடக்குப் பார்த்து நிறுத்தப்பட்டிருக்கும் நடு கல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பக்கத்திலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் முப்பத்து மூன்றாவது ஆட்சி ஆண்டில் வாணகோ அரசர் மருமக்களுள் பொன்னைமன்னன்னார் மகன் பொன்ன ரம்பனார் என்பவர் மேல் இண்ணபந்தரின் மகன் கந்தவிண்ணனார் என்பவர் வெலட்டுண் மேல் சென்று தாக்கிய பொழுது கந்த விண்ணன்னாரின் சேவகன் புதணடி மக்கள் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1 கோவிசைய மயேந்திரபருமற்கு
2 முப்பத்து மூன்றாவது வாணகோ அரைசரு
3 மருமக்களுட் பொன்னைமன்னன்னார் மகன்
4 னார் பொன்னரம்பனார் மேல் இண்ணபந்த மகன்னார் கந்த[வி]ண் ணனார் வெலட்டு[ண்]
5 மேல்ச் சென்றெறிந்த ஞான்று
6 நல்ல
7 னாய் தி
8 ரிந்து ப
9 ட்டான்
10 கந்தவிண்ண
11 னார் [சேவக]

(திருப்பவும்)

12 ண் புத

13 ணடி மக்[க]

14 ள் .

15 . . . . . . .

16 . தனெத ம

17 . ஞதன்

18 . . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | எடக்கல் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : இரட்டை வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்வெட்டு முதற்பகுதியிலும் பக்கப் பகுதியிலும் உடைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்பக்கம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டி உள்ளது. உருவத்துக்கு மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. குன்றகட்டி என்பான் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . தி . . .
2 . பெண்ணை வடகரை மே . கொ . . .
3 . . நிக . இருந்து . . . தே . . .
4 . டு . மக்கள் குன்றகட்டி . . ரு பைய . . .
5 ரு தொறுக் கொண்ட ஞான்று பட்டாரு கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தென்முடியனூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | — | | |

இடம் : குடியானவர் வேடியப்பன் கோயிலில் தெற்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்வெட்டின் கடைப்பகுதியே உள்ளது. கல்லில் வீரனது உருவம் இடக்கையில் வில்லேந்திய தோற்றத்துடன் காணப்படுகிறது. அருகில் கெண்டி, கண்ணாடி, கலம் ஆகியவை உள்ளன. பிற்காலத்தில் வீரனது உருவம் ஆழமாகச் செதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். கலத்தையும் பிற்காலத்தில் சிவலிங்கமாகச் செதுக்கியுள்ளார்கள்.

கல்வெட்டு :

1 . னு . . . . . . . யார்
2 குதி[ரை] . . . மக்க
3 ண்ணமட் . .
4 குத்தி
5 பட்டான்
6 கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 7-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | தண்டராம்பட்டு | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | முதலாம் நரசிம்மவர்மன் | | |

இடம் : கிருஷ்ணரப்பன் கோயில், கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் மேற்பகுதியில் இருதோரணங்களும், இடது காலுக்குப் பக்கத்தில் கண்ணுடியும், கெண்டியும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும், இடப்பக்கத்திலும், எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் நரசிம்ம வர்மனின் ஏழாம் ஆட்சி ஆண்டில் வாணகோ தன்சிற்றப்பன் பொன்மாந்தாணர் மீது படையெடுத்தபோது, பொன்மாந்தாணர்க்காக கடுவந்தையார் மகன் விற்சிதை என்பார் போரில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய நரை
2 சிங்கபருமற்கு யா
3 ண்டேழாவது மேற்கோவ
4 லூரர் மேல் வாணகோ முத்த
5 ரைசர் நாடு பாவிய தஞ்சிற்
6 றப்படிகள் பொன்மாந்தாணர் மேற்
7 வந்த ஞான்று பொன்மாந்தாணர்க்காய்ப் பட்டா
8 ன் கடுவந்தையார் மகன் விற்சிதை கல் வாண
9 கோக்கட
10 மர்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 7-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தண்டராம்பட்டு | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | முதலாம் நரசிம்மவர்மன் | | |

இடம் : கிருஷ்ணரப்பன் கோயிலில் தெற்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. வலது கைக்கு மேல் தோரணம் ஒன்று உள்ளது. உருவத்தின் வலது பக்கம் சிமிழும், கண்ணாடியும், இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும் உள்ளன. வீரனது உடலிலும், நெற்றியிலும் அம்புகள் தைத்துள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும் இடப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மனின் ஏழாம் ஆட்சி ஆண்டில் வாணகோ தன்சிற்றப்பன் பொன் மாந்தாளூர் மேற் படையெடுத்தபோது, துருமாவனூர் மகனை மாற்கடலன் என்பார் போரில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய நரை
2 சிங்கபருமற்கு யா
3 ண்டேழாவது வாணகோ முத்
4 தரைசரு நாடு பாவிய மேற் கோ
5 வலூர் மேல் வந்து தஞ்சிற்றப்
6 படிகளை எறிந்த ஞான்
7 று பட்டான் சேவர்பரி அட்டுங் கொள்
8 ளி துருமா
9 வனூர் மக
10 ன் மாற்கட
11 லன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வடஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | [1]-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 10-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | கோணுங்குட்டை | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லின் மேற்பகுதி உடைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடதுகையில் வில்லும் வலதுகையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் வலதுகாலுக்குப் பக்கத்தில் சிமிழும், இடதுகாலுக்குப் பக்கத்தில் கலமும், குத்து விளக்கும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பகுதியிலும், இடப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. வீரனின் நெற்றியில் அம்பு பாய்ந்துள்ளது. . . . . காலிப்பாடியைச் சேர்ந்த ஆநிரைகளைக் கவர்ந்தபோது, நம்மடியானம்மம்ம என்பான் அவ்வா நிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. கலிய்யதண்ணன் என்பான் இக்கல்லை நட்டதாகவும் குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1 . . [ஒ]ன்றுவது . .
2 . . ட்டத்து மேல் வே . .
3 . . மடிகள் ளாள்கி . .
4 . . ளமுடைய மாதவி . .
5 . . ன் மாரட்டன் தாள . .
6 . . . . காலிப்பாடி
7 . . ள அவ்வூர் தொ
8 [டு]றுக் கொள்ள தொறு மீ
9 ட்டு பட்டான் நம்மடி

(திருப்பவும்)

10 யானம்மம்

11 ம கல் நடு

12 வித்தாண்

13 கலிய்ய

14 தண்ண

15 ன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 7-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | பிஞ்சூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | தந்திவிக்கிரமபன்மர் | | |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : இக்கல்வெட்டு மூன்று துண்டுகளாக உடைந்து வெவ்வேறு இடத்தில் கிடந்தன. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில் உள்ளது. வலது கை உடைந்து, காணப்படவில்லை. வலது காலுக்குப் பக்கத்தில் குத்துவிளக்கும் இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும் உள்ளன. வீரனது உடம்பில் இரு அம்புகள் பாய்ந்துள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும் இடப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் தந்திவர்மனின் 7-ஆம் ஆட்சி ஆண்டில் அடையாறு நாட்டு பல்குன்றக் கோட்டத்தைச் சேர்ந்த நந் பெருமாபுஞ்சி ஊரில் வாழும் கூதனூர் பாதனூர் காலிமாறன் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 [ . . . . . ] சய பல்லவ தந்தி
2 . . டுகு விக்கிரம பன்மற்
3 [ . . . . ] டு ஏழாவது அடையாற்று
4 [ . . . . ] ன்றக் கோட்டம் நந் பெருமா
5 புஞ்சி
6 ஊருடை
7 ய கூத
8 [னூ]ர் பா
9 தனூ
10 ர் காலி
11 மாறன்
12 பட்டா[ர்]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 10-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 8-ஆம் நூற்றூண்டு |
| ஊர் : | தாழையூத்து | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | பல்லவர் | முன் பதிப்பு : | — |
| மன்னன் : | இரண்டாம் நரசிம்மவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

